ஆண்டு அறிக்கை

2019

இலங்கை போக்குவரத்துச் சபை

உள்ளடக்கம்

01 தொலைநோக்கு, பணி, இலக்குகளும் குறிக்கோள்களும்

02 அறிமுகம்

03 தலைவரின் செய்தி

04 செயற்திறனும் முன்னேற்ற மீளாய்வும்

05 கணக்கீட்டுக் கொள்கை

06 நிதிக் கூற்று

07 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த போக்குவரத்தாளர்

பணி

பொது மக்களுக்கு பாதுகாப்பான நம்பத்தகுந்த வசதியுள்ள வீதிப் பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அரப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்தி வளமிக்க பணியாளரின் மூலம் சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக் கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையை பேணும் நிறுவனமாக இயங்கல்.

இலக்குகளும் குறிக்கோள்களும்

1 12 பிராந்திய அலுவலகங்கள் மூலம் சிறந்த தரமுடைய பயனுடைய பஸ் சேவைகளை ஊக்குவித்து அவற்றை கண்காணித்து இணைத்து ஆலோசனை வழங்குதல்.

2 பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்.

3 பண நோக்கங்களுக்காக தனியார் துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப்பட்டுள்ள வருவாய் அற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்.

4 புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்.

5 பொது தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

6 விழாக்கள், விசேட வைபவங்கள், பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள், முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

7 தபால்களையும் பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

8 பஸ் செயலாற்றலுக்காக பொது திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகள், உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தல்.

9 இ.போ.ச சாரதிப் பயிற்சி பாடசாலைகளில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காறுடைய சாரதிகளை அளித்தல்.

10 சாரதிகளுக்கும் நடாத்துநர்களுக்கும் பொறிவலர்களுக்கும் மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள், தொழிற் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11 பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12 வயது வந்தோர்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு விகிதங்களில் பருவகால சீட்டுக்களை அளித்தல்.

13 முக்கியமான மாற்று உறுப்புக்களை மாகாண வேலைக்களங்களுக்கு விநியோகிப்பதற்காக நாரேஹேன்பிட்டியில் உள்ள இ.போ.ச தலைமையகத்தில் இடப் பெயர்ச்சி களஞ்சியம் ஒன்றை பேணல்.

14 சாலைகளில் பாதுகாப்பு புலனாய்வுகளையும திடீர் பரிசோதனைக் குழு செவ்வை பார்த்தல் முதலியவற்றையும் நடாத்துதல்.

அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானது என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இக்கூற்று வீதிப் பயணப் போக்குவரத்துக்கும் விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும் நகரங்களையும் அதன் மூலம்முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கிறது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்பட்ட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.ச வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏக போக உரிமையை கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்து சட்டத்தின் மூலம் இ.போ.சபையுடன் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்துச் சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.ச வை பன்முகப்படுத்தியன் மூலம் உருவானது. சிறிய அளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும் உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொது மக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்துவதன் மூலம்அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும் பொருளாதாரம் சுதந்திரமயமாக்கப்படல் வேண்டும் என்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறையை அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச மக்கள் மயமாக்கப்படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார்மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தமையினால் இம்மாற்றம் அரச கூட்டுத்தாபனங்களை அதாவது அரச உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளை பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் இடம் பெற்றது.

மக்கள் மயப்படுத்தலின் போது இயங்கிய 93 போக்குவரத்து சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாயின. ஊழியர் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. பெரும்பாலும் ஊழியர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை இக்கம்பனிகளின் நிருவாகத்தை நடாத்தியது. மக்கள் மயமாக்கல்

ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப் பட்டமையினால் விரும்பிய விளைவுகளை அடைய முடியவில்லை.

எனவே 1977 ஆம் ஆண்டு 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் திருத்தம் மூலம் பஸ்கம்பனிகள் 11 கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. கொத்தணி பஸ்கம்பனிகளாலும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. மேலதிகமான பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, சமூகக் கடப்பாடுகள், தொழில் முறைமையின்மை, வினைத்திறன் இன்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல் தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ்கம்பனிகளில் நிலவிய சில பிரச்சினைகள் ஆகும்.

மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்து சபை தாபிக்கப்பட்டது.

தலைவரின் செய்தி

2019.01.01 முதல் 2019.12.31 ஆம் திகதிவரையான காலவெல்லைக்குரிய இலங்கை போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச) ஆண்டு அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். 2019.12.27 ஆந் திகதி நான் இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவராக பதவியேற்றேன். பரிசீலனையிலுள்ள காலத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவராக நான் பதவிவகிக்கவில்லையாயினும், 2019 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கைக்கு நான் செய்தி அளிக்கின்றேன்.

இலங்கையிலுள்ள பாரிய அரச நிறுவகங்களில் இ.போ.ச வும் ஒன்றாகும். தேசியமயத்திற்கு முன்னர் போக்குவரத்து அமைப்பு முறையை விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தனிப்பட்ட பஸ் உரிமையாளர்களே ஒழுங்கு செய்தனர். தேசிய செல்வம் ஒரு சிலரின் கரங்களில் மாத்திரம் திரண்டு கிடப்பது நியாயமற்றதென்பதாலும், தேசிய செல்வம் எல்லோர் மத்தியிலும் சமனாக பகிரப்பட வேண்டுமென்பதாலும் பஸ் சேவைகள் தேசிய மயமாக்கப்பட்டன. எனவே இ.போ.சவின் முன்னேற்றம் இந் நிறுவனத்தின் ஊழியர்களிலும் முகாமைத்துவத்திலுமே தங்கியுள்ளதென்பதை அறிந்து கொள்வது உசிதமாகும்.

பரிசீலனையிலுள்ள ஆண்டில் இ.போ.ச சராசரி நாளொன்றுக்கு 5079 பஸ்களை செயலாற்றியது. செயலாற்றிய மொத்த கிலோ மீற்றர்த் தொகை 431.3 மில்லியனாகும். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 3.29% ஆல் குறைந்து காணப்படுகிறது. இக்குறைவு 14.7 மில்லியன் ஆகும்.

வழிப்பட்டியல் வருவாய் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் 5.61% ஆல் அதிகரித்து காணப்படுகிறது. இவ்வதிகரிப்பு 1663 மில்லியன் ரூபாவாகும். 2019 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டு இலாபம் 1890 மில்லியன் ரூபாவாகும். ஆயினும் இதனை 2018 ஆம் ஆண்டு ஈட்டப்பட்ட இலாபத்துடன் ஒப்பிடும் போது 45.97% (12.95 மில்லியன் ரூபாவால்) அதிகரிப்பு காணப்படுகிறது.

திறைசேரியினால் அளிக்கப்பட்ட நிதி மூலம் 856 எஞ்சின்களும் 1334 கியர்ப் பெட்டிகளும், 399 பஸ் உடற் கோப்புகளும் பழுது பார்க்கப்பட்டன. பஸ் செயலாற்றல் எண்ணிக்கை அதிகரிப்பு மூலம் பஸ்களில் மிகையாகப் பயணிகள் ஏற்றுதலைக் குறைத்தல், காலை மாலை பஸ் சேவைகளை அதிகரித்தல், சாரதிப் பயிற்சியில் திறன்களை வளர்த்தல், கணினி அறிவிலும் வியாபார முகாமைத்துவத்திலும் அலுவலர்கட்கு பயிற்சியளித்தல்,

கைவிடப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களை நடை முறைப்படுத்தல், சாரதி விபத்துக்களை இயன்றளவு குறைக்கும் வகையில் வேலைத்திட்டங்களை நடை முறைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் போக்குவரத்து முறைமையை வலுவூட்டி பஸ் போக்குவரத்து சேவைகள் அதிகரிக்கப்பட்டன.

முக்கியமாக பாஸ்கு ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலாலும் கொவிட் 19 நோய் பரவலாலும் இ.போ.சபையின் நிதி வினைத்திறன் 2019,2020 ஆம் ஆண்டுகளில் பின்னடைவை சந்தித்தது. தற்போதும் அந் நிலை தொடர்கிறது. தற்போது நாளொன்றுக்குச் சராசரி 5500 பஸ்கள் சேவைக்கு அளிக்கப்படினும் அதில் 5000 பஸ்கள் மட்டுமே சராசரியாக நாளொன்றுக்குச் செயலாற்றப்படுகிறது. இ.போ.சபையின் சராசரி நாளாந்த வழிப்பட்டியல் வருவாய் ஏறத்தாழ 63 மில்லியன் ரூபாவாகும்.

சபையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக இ.போ.சபையின் சகல பணியாளர்களும் பணிப்பாளர் சபையும் அளிக்கும் பங்களிப்பையிட்டு நான் பெரிதும் உவகை எய்துகிறேன். அரச கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாண்புமிகு போக்குவரத்து அமைச்சருக்கும், மாண்புமிகு பஸ் போக்குவரத்துச் சேவை, புகையிரத சேவை மற்றும் மோட்டார் வண்டி, கைத்தொழில் இராசாங்க அமைச்சருக்கும், இவ்விரண்டு அமைச்சுக்களின் செயலாளர்கட்கும், திறைசேரி அலுவலர்கட்கும் மற்றும் விசேட அக்கறையுடைய ஏனையோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

கிங்ஸ்லி ரணவக்க

தலைவர்

இலங்கை போக்குவரத்து சபை

செயலாற்றுப் பகுதி

01. 2019 ஆம் ஆண்டில் செயலாற்றலுக்கு நாளொன்றுக்கு அளிக்கப்பட்ட சராசரி பஸ் தொகை 5874 ஆகும். செயலாற்றிய பஸ்களின் தொகை நாளொன்றுக்கு சராசரி 5079 ஆகும். நாளொன்றுக்கு செயலாற்றிய சராசரி கிலோ மீற்றர் தொகை ஏறத்தாழ 1.18 மில்லியனாகும். நாளொன்றுக்கு ஈட்டிய சராசரி வழிப்பட்டியல் வருவாய் கிலோ மீற்றரொன்றுக்கு ரூ 63.26 ஆகும். 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலால் நாட்டில் ஏற்பட்ட நிலைமை காரணமாக ஏப்ரல்,மே மாதங்களில் செயலாற்றலுக்கு அளிக்கப்பட்ட பஸ் தொகையிலும் வருவாயிலும் பின்னடைவு ஏற்பட்டது.

02. இ.போ.சபையால் அளிக்கப்படும் விடியற்காலை, பிந்திய இரவு நேர பஸ் பயணங்கள் பயணிகளின் தேவைக்கேற்ப அதிகரிக்கும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. இ.போ.சபையால் புகையிரத இணைப்புச் சேவையை மேம்படுத்தும் முகமாக பயணிகளின் தேவைக்கேற்ப புகையிரத நிலையங்களிலிருந்து புறப்படும் சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கும் புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

04. "சிசு சறிய" திட்டத்தின் கீழ் 740 சிசுசறிய பஸ் சேவைகள் வரை செயலாற்றக்கூடியவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் பாடசாலைகளினதும் மாணவர்களினதும் தேவையையும் வேண்டுகோள்களையும் கருத்திற் கொண்டு இச் சேவைகளைப் பலப்படுத்தி விரிவுபடுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

05. சகல பஸ்களிலும் இலத்திரனியல் பயணச் சீட்டு இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் பயணிகட்கு அளிக்கப்படும் சேவையின் வினைத்திறனையும் உற்பத்தி வளத்தையும் உயர்த்த முடிந்துள்ளது.

இ.போ.ச வினால் சமூக நலனுக்குப் பங்களிப்பு

விடியற்காலையிலும் பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப் பயணங்கள் செயலாற்றல்

விடியற்காலையிலும், பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப் பயணங்களை ஏற்பாடு செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கிராமிய பணியாளர்களின் போக்குவரத்திற்கு நேரடியாகப் பங்களிப்பினும் நெடுங்காலமாக இதனால் கிட்டுவது நல்லெண்ணம் மாத்திரமேயாகும். ஆயினும் இ.போ.ச ஆற்றுகின்ற மற்றுமோர் சமூக கடமையெனக் கருதி இச் சேவைகள் பயனஞ் செய்யும் பொதுமக்களுக்காக தொடர்ந்தும் செயலாற்றப்படுகின்றன.

கிராமியப் பிரதேசங்களில் பஸ் செயலாற்றல்

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முகமாக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்து ஊடகமாக நேரடிப் பங்களிப்பை வழங்கி வருவது இ.போ.சபையேயாகும். பயணிகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இச் சேவைகளைத் தொடர்ச்சியாக அளிப்பதற்கு எப்போதும் நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் புதிய பஸ்களை கொள்வனவு செய்து இச் சேவைகளைத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் இச்சேவைகளை மேம்படுத்தும் திட்டங்கள் தீட்டப்படுவது எதனாலென்றால் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு கிராமப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது ஒரு காரணக் கூறாக இருப்பதனாலாகும்.

பாடசாலை பஸ் சேவைகள் செயலாற்றல்

இ.போ.ச சபை எதிர்கால சந்ததியைக் கருத்திற் கொண்டு பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கும் பிரமாண்டமான சேவையாற்றி வருகிறது. பயணிகள் தேவைகளிற்கேற்ப நீண்ட காலத்திற்கு உயர்ந்த இலாபமீட்டக்கூடிய சந்தரப்பங்களைப் பயன்படுத்தாது, எதிர்கால சந்ததியினரின் நன்மையைக் கருத்திற் கொண்டு உரிய நேரத்திற்கு பிள்ளைகள் பாடசாலைகட்குக் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

செயலகப் பகுதி

2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

01 ஆம் கூட்டம் – 2019.03.19

02 ஆம் கூட்டம் – 2019.04.05

03 ஆம் கூட்டம் – 2019.05.03

விசேட பணிப்பாளர் சபைக் கூட்டம் 2019.05.13

04 ஆம் கூட்டம் – 2019.06.07

அவசர பணிப்பாளர் சபைக் கூட்டம் 2019.07.17

05 ஆம் கூட்டம் – 2019.07.05

06 ஆம் கூட்டம் – 2019.08.02

07 ஆம் கூட்டம் – 2019.09.06

08 ஆம் கூட்டம் – 2019.10.03

09 ஆம் கூட்டம் – 2019.11.07

2019 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை விசேட, அவசர பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் உட்பட 11 ஆகும்.

இலங்கை போக்குவரத்து சபையின் மேற்குறித்தபணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்துவது தொடர்பான நடவடிக்கைகள்.

1. பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெறவிருக்கும் தினத்தை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் இ.போ.ச பகுதி/பிரிவு தலைவர்கட்கும் அறிவித்தல் விடுத்தல்.
2. சபை விஞ்ஞாபனங்களை பொறுப்பேற்று விஞ்ஞாபன இலக்கத்தை இட்டு பதிவு செய்ததன் பின்னர் கோவை தயாரித்து பணிப்பாளர் சபை உறுப்பினர்களிடம் கையளித்தல்.
3. பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய சுற்றறிக்கை கடிதங்களை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் கூட்ட நிகழ்ச்சி நிரலை தயாரித்தல்.
4. நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவும் தலைவரின் அறிவுறுத்தலின் பேரிலும் பணிப்பாளர் சபை விஞ்ஞாபனங்களையும் சுற்றறிக்கைக் கடிதங்களையும் சமர்ப்பித்தல்.
5. அவ்வந்த பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்துக்கும் சுற்றறிக்கை கடிதத்துக்கும் தொடர்பாக பணிப்பாளர் சபை அளிக்கும் தீர்மானங்களையும் இடை நேர் விளைவான தீர்மானங்களையும் சரியாக அறிக்கையிட்டு பணிப்பாளர் சபை தீர்மானங்களை விடய இலக்கத்திற்கேற்ப தயாரித்தல்.

6. அவ்வாறு குறிப்பிட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானங்களுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர், தீர்மானங்களில் தனிப்பட்ட தேர்வு செய்யப்பட்ட பகுதிளைப் பிரித்தெடுத்து உரிய இ.போ.ச பகுதித் தலைவர்கள்/ பிரிவுத் தலைவர்களுக்கு அனுப்புதல்.
7. இந்நடவடிக்கைகள் யாவும் சரியாகவும் அந்தரங்கமாகவும் முறையாகவும் நிறைவேற்றப்படுதல்.
8. இ.போ.ச பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படும் பகுதி/பிரிவுத் தலைவர்கட்கும் உபசரணை அளித்தல்.
9. பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர்கள் அல்லாதோருக்கு) பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
10 பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர் அல்லாதோர்) பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு போக்குவரத்துப் படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காணிகள் தொடர்பான நடவடிக்கைகள் நிறைவேற்றல்

01 32 ஆண்டுகளாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பெற முடியாதிருந்த கங்க அத்தறவத்தை காணியின் உரித்தைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக நீதிப் பிரிவிற்கு தொடர்புறுத்தப்பட்டுள்ளது.

02. சிறி ஜயவர்த்தன புரி கோட்டை மாநகர சபையின் எல்லைக்குள் அபிவிருத்தி நடவடிக்கைகட்காக இ.போ.சபைக்கும் சிறி ஜயவர்த்தனபுரி கோட்டை மாநகர சபைக்கும் இடையே நிபந்தனை அடிப்படையில், பணிப்பாளர் சபைத் தீர்மானம் பிரகாரம், அரச மதிப்பீட்டாளரின் அறிக்கை பெற்று 2016.01.25 முதல் 2019.01.24 வரையான காலத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

2016.01.25 – 2017.01.24 – 2260000 ரூபா

2017.01.25 – 2018.01.24 – 2260000 ரூபா

2018.01.25 – 2019.01.24 – 2260000 ரூபா

மேற்குறித்தவாறு ஒப்பந்த காலத்திற்குக் காணி விடுவிக்கப்பட்டது. பின்னர் 2019.05.22 ஆம் திகதிய கடித மூலம் மாநகர சபை ஆணையாளர் மூலம் மேலுமோர் ஆண்டுக்கு (2019.01.25 – 2020.01.24) அக்காணியை அளிக்குமாறு கோரிக்கை விடப்பட்டது. அதற்கேற்ப 2019.06.07 ஆண்டு நிகழ்நத 4 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 49 ஆம் பத்திரத்தின் கீழ் 2019.01.25 – 2020.01.24 வரையான காலத்திலற்கு மேற்குறித்த காணியை அளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

அக்காலவெல்லைக்குறிய ஒப்பந்தம் தயாரித்து கையொப்பமிடுமாறும் அதற்கான குத்தகைக் கட்டணம் (2260000.00 ரூபா) அறவிடுவதற்கு சிறி ஜயவர்த்தன புரி கோட்டை மாநகர சபையைச் சேர்ந்தவர்கட்கு எழுத்திலும் வாய்மொழி மூலமாகவும் பல தடவைகள் அறிவித்திருந்தும் இது தொடர்பான கொடுப்பனவு நடவடிக்கைகளோ அல்லது ஒப்பந்தம் கைச் சாத்திடுவதற்கான நடவடிக்கைகளோ இது காறும் இடம் பெறவில்லை.

03 தேசிய பிரதேச மட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகட்கு முன்னுரிமையளித்து இ.போ.சபைக்கும் கே.டீ. ஈபெட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (தனிப்பட்ட) கம்பனிக்கும் இடையே செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கேற்ப மாத்தளை மாகாண வேலைக்களம் அமைந்துள்ள இடத்தில் பிரத்தொதுக்கிய காணித் துண்டில் வானங்கள் பழுது பார்ப்பதற்கும், பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்குமான கட்டடங்கள் நிருமாணம் தொடர்பாக

2016.03.14 – 2018.03.13 – 960000.00 ரூபாவுக்கு உட்பட்டு விடுக்கப்பட்ட பின்னர் அந் நிறுவகத்தின் உதவிப் பொது முகாமையாளர் எம்.எஸ்லி சுசில் குமாரவின் 2018.01.29 ஆந் திகதிய கடிதத்திற்கேற்ப குத்தகை மேலுமோர் ஆண்டுக்கு நீடிக்குமாறு கோரப்பட்டது.

அதற்கேற்ப 2018 ஆண்டின் 03 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 20 ஆம் பத்திரத்திற்கேற்ப 2018.03.14 முதல் 2019.03.13 வரையான காலத்திற்கு முன்னர் நடைமுறையிலிருந்த மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமானத்தின் 10% ஐயும் சேர்த்து.

ஆண்டொன்றுக்கு அறவிடப்படும் தொகை

40,000 x 12 = 480,000 ரூபா

= 480,000 ÷ 10% = 48,000 ரூபா

= 480,000 + 48,000

= 528,000/- ரூபா

மேற்குறித்த தொகைக்கு உட்பட்டு மேற்குறித்த காணி விடுவிக்கப்பட்டது. இதற்காக நிதிப் பகுதியில் பணம் செலுத்திய பின்னர் பணம் பெற்றுக் கொண்டமைக்கான 105093 இலக்கம் கொண்ட பற்றுச் சீட்டு வழங்கப்பட்டது.

மேற்குறித்த காணியை மேற் கூறிய காலத்திற்குப் பின்னரும் (2019.03.14 – 2019.05.02 வரை) காலத்திற்கு கே.டீ.ஈபட் அன்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி பயன்படுத்துவதற்காக ரூ 70400.16 பணம் 2019.09.01 ஆந் திகதி இ.போ.ச விற்கு செலுத்தப்பட்டுள்ளது.

2019.03.14 - 2019.05.02

2019.03.14 – 2019.05.02 வரை – 48 நாட்கள்

ஆண்டொன்றுக்கு அறவிடப்படும் தொகை = 528000 ரூபா

நாளொன்றுக்கான தொகை = **5280000 /360**

= ரூபா **1466.07**

= **1466.67 × 48**

= ரூபா **70400.16**

இத் தொகைக்கு உரிய கொடுப்பனவு பற்றுச் சீட்டு இது வரை செயலகப் பகுதிக்கு கிடைக்கவில்லை.

04 இ.போ.ச புறக் கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயணிகள் உறையகம் இ.போ.ச பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி மாதாந்த குத்தகை கூலி செலுத்தும் அடிப்படையில் விடுவிக்கப்பட்டது. அதற்கேற்ப 2015.12.31 முதல் 2020.12.21 வரையான காலத்திற்கானது.

2015.12.21 முதல் 2017.12.20 வரையான காலத்திற்கு மாதமொன்றுக்கு 120000 ரூபாவை அந்நிறுவகம் (ஹேசான் கேரஸ் தனியார் கம்பனி இ.போ.ச விற்கு செலுத்தியது. ஒவ்வொரு மாதத்திற்குமுரிய கொடுப்பனவு பற்றுச் சீட்டு நிதிப் பகுதியால் வழங்கப்பட்டுள்ளது.

2017.12.21 முதல் 2020.12.20 வரை மாதமொன்றுக்கு 135000 ரூபா வீதம் 2020 பெப்ரவாரி வரை கொடுப்பனவு முறையாக நிகழ்நதுள்ளது. ஒவ்வொரு மாதமும் பணக் கொடுப்பனவிற்கான பற்றுக் சீட்டு நிதிப் பகுதியால் வழங்கப்பட்டுள்ளது.

05 கழுத்துறைச் சாலையை விஸ்தரிப்பதற்காக கொள்ளப்பட்ட 4 ஏக்கர் காணித் துண்டுக்கு 44 ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கும் சான்றிதழ் பெற விண்ணப்பித்திருப்பினும் அது இது வரை கிடைக்கவில்லை. இது தொடர்பாக ஞாபக மூட்டல் மடல்களும் அனுப்பப்பட்டுள்ளன.

06 கஸ்பாவை சாலைக் காணியில் வீதி அபிவிருத்திக்கென கொள்ளப்பட்ட 0.1490 ஹெக்டேயர் காணித்துண்டுக்கும் அதில் அமைந்துள்ள சொத்திற்கும இக் கொள்ளலுக்குரிய காணிக்கு நட்ட ஈட்டு உரிமைப் பரிசோதனையின் பின்னர் 46390375/- ரூபா உரிமை நட்ட ஈடாக இ.போ.ச விற்கு அளிக்கப்பட்டது.

இந் நட்ட ஈட்டுத் தொகையில் 16018500 ரூபாவிற்கு 307341 இலக்கம் கொண்ட இலங்கை வங்கியின் பத்தர முல்லைக் கிளை மூலமான காசோலை 2016.12.22 ஆம் திகதி இ.போ.ச தலைவருக்கு கிடைத்தது. அக் காசோலை 2017.01.17 ஆம் திகதி இ.போ.ச தலைவரால் கடிதமொன்றுடன் நிதிப்பகுதிக்கு அனுப்பப்பட்டது. அதற்காக 2017.01.17 ஆம் திகதிய 092386 ஆம் இலக்கங் கொண்ட பணம் பெற்றுக் கொண்டதை ஏற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டு இபோ.ச நிதிப் பகுதியால் வழங்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக நட்ட ஈட்டின் மீதிப் பகுதியான 30371875 ரூபா பெறுமதியுடைய காசோலை 2018.09.17 ஆந் திகதி இ.போ.ச விற்குக் கிடைத்தது. ஆயினும் அக் காசோலை வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படாமையினால் புதிய காசோலையொன்றை வழங்குமாறு இ.போ.ச நிதிப் பகுதிக்கு முகாமையாளர் (நிதி/ஆகுசெலவு) தேசிய நெடுஞ்சாலைத் துறை வாரியான திடடத்தின் பத்தர முல்லைத் திட்டப் பணிப்பாளரிடம் விடுத்த வேண்டுகோளின் பெயரில் இ.போ.ச விற்கு காசோலை கிடைத்ததுடன் 2018.10.23 ஆம் திகதி இ.போ.ச அக் காசோலையை வங்கியிலிட்டதெனவும் தெரிய வந்தது. இக் காசோலைக்கான பற்றுச் சீட்டை வழங்குமாறு கடித மூலம் கோரப்பட்டிருப்பினும் இது வரை அப்பற்றுச்சீட்டு செயலகப் பகுதிக்குக் கிடைக்கவில்லை.

07 இ.போ.ச ஊறுகொடவத்தை எரிபொருள் நிலையக் காணியில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைக்காக சாட்டப்பட்ட 26 பேச்சர்ஸ் காணித்துண்டு தற்போது உரிமையாக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் உரிய மதிப்பீட்டுப் பெறுமதி இ.போ.ச விற்குச் சாட்டும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

08 மட்டக்குளிச் சாலைக் காணிக்கு 04/10/46386 இலக்கம் கொண்ட இலவச கொடைப் பத்திரம் 2019.09.19 ஆம் திகதி கிடைத்தது. இச் சொத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி

காணி - 676800000/- ரூபா

கட்டடங்கள- 24000000/- ரூபா

09 கொத்மலைச் சாலைக் காணி தொடர்பாக அத்து மீறிக் குடியிருப்போரை வெளியேற்றி அக்காணிக்கான நட்ட ஈடு கொடுக்கப்பட்தென ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தியும் 44 ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கும் சான்றிதழ் கோரியும் இது வரை கிடைக்கவில்லை

10 இ.போ.ச வென்னப்புவ சாலைக் காணிக்கு 44 ஆம் பிரிவின் கீழ் உரித்தளித்தல் சான்றிதழ் கோரியும் இது வரை கிடைக்கவில்லை

11 எல்பிட்டிச் சாலை காணியில் 140 பேச்சர்ஸ் பொலிஸ் திணைக்களத்திற்கு அளிப்பதென இ.போ.ச பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கேற்ப அக்காணி அளவீடு செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கபட்டடு அரச விலை மதிப்பீட்டாளரின் அறிக்கை பெறப்பட்டு அப் பெறுமதியை இ.போ.ச அறவிட்டு காணியை விடுவிப்பதற்கான அமைச்சரவைத்த தீர்மானம் நிறைவேற்றப்படாமையால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

12 உள்ளக உள்நாட்டு அலுவலகல்கள், உள்ளூராட்சி அமைச்சின் அமைச்சரவைப் பத்திரத்திற்கேற்ப காணி கொள்ளல் சட்ட ஏற்பாடுகட்கேற்ப இக் காணி கொள்ளப்பட்டமையினால் தற்போதைய பெறுமதியைச் செலுத்துவதற்குப் பதிலாக காணி கொள்ளப்பட்ட வேளை அளிக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகையையும் செய்யப்பட்ட அபிவிருத்தக்கான மதிப்பிட்ட பெறுமதியையும் மாத்திரம் கொடுக்கும் அடிப்படையின் பேரில் விடுவிப்பதற்கு போக்குவரத்து முகாமை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

13 இ.போ.ச கம்பஹா பந்தியா முல்லை காணியில் 27 பேச்சர்ஸ் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்திற்கு உரித்தளிப்பதற்காக பணிப்பாளர் சபைத் தீர்மானம் பெறப்பட்டு அத்தீர்மானத்திற்கேற்ப அளவீடு செய்யப்பட்டுஇ வரைபடம் தயாரிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெற்று அரச விலை மதிப்பிட்டுப் பெறுமதியான 20250000/- ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான 88475 இலக்கங் கொண்ட பற்றுச் சீட்டு நிதிப் பகுதியிலிருந்து செயலகப் பகுதிக்கு கிடைத்துள்ளது.

14 இ.போ.ச கம்பஹா சாலைக் காணியில் 02 ஏக்கர் 38.4 பேச்சர்ஸ் மோட்டார் வாகனப் போக்குவரத்துச் திணைக்களத்திற்கு உரித்தளிப்பதற்காக அளவீடு செய்யப்பட்டு, வரைபடம் தயாரிக்கப்பட்டு, இ.போ.ச பணிப்பாளர் சபைத் தீர்மானப் பிரகாரம் அரசவிலை மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. அதற்கேற்ப அரச விலை மதிப்பீட்டுப் பெறுமதி 432000000 ரூபாவாகும். இக்காணியை விடுவிப்பது தொடர்பாக போக்குவரத்து முகாமைத்துவ திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

15 ஏக்கலை பிராந்திய வேலைக்களம் அமைந்துள்ள 24 ஏக்கர் காணி தொடர்பாக 44 ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கும் சான்றிதழ் பெறுவதற்காக இக்காணியை அளவீடு செய்து வரைபடம் தயாரித்து அது தொடர்பாக நடவடிக்கை மேற் கொண்டதன் விளைவாக தற்போது 44 ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கும் சான்றிதழ் (இல. 3/2/5/5/970) இ.போ.ச வால் பெறப்பட்டுள்ளது.

16 மாத்தளை நகர சபைக்கு வீதி விஸ்தரிப்பதற்காக இ.போ.ச மாத்தளைச் சாலைக் காணியில் 2.83 பேச்சர்ஸ் உரித்தளிப்பது தொடர்பான திட்டம் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

17 தொழில் திணைக்களத்தின் வேண்டுகோளின் படி கட்டடம் நிருமாணிப்பதற்கான அனுமதியை இ.போ.ச பெற்றுள்ளது. காணி பாராளுமன்ற சீர்திருத்த அமைச்சின் உதவிப் பணிப்பாளரின் (காணி கொள்ளல்) கடிதத்திற்கேற்ப 44 ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கும் சான்றிதழ் மூலம் மட்டுமே இ.போ.ச காணியை கையகப்படுத்தியமையால் கையகப்படுத்தும் போது ஏற்பட்ட செலவையும் அதன் பின்னர் அபிவிருத்தி ஏதாவது செய்திருப்பின் அச் செலவையும் மாத்திரம் அளிப்பதற்கு தீர்மானித்துள்ளமையால் 17/1932/712/013-1 ஆம் இலக்க 2017/09/12 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பாக போக்குவரத்து முகாமை அமைச்சிற்கு தொழில், தொழிற் சங்க உறவு அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது.

18 பதுளை காணி மீட்பு ஆணைக்குழுவினால் கொள்வனவு செய்யப்பட்ட 5 ஏக்கர் காணித்துண்டுக்கு உறுதி பெற்றுத் தருமாறு ஆண்டுக் கணக்காக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் இது வரை உறுதி கிடைக்கவில்லை. இது தொடர்பாக மீண்டும் உரையாடல் ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது.

நீதி அமைச்சின் வேண்டுகோளில் 05 ஏக்கர் அளிப்பதற்காக காணி உரிமை தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான காணியென உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களைக் கோரி நீதி அமைச்சால் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு தொடர்புறுத்தப்பட்டும் இது தொடர்பான மறுமொழி மடல் இது வரை கிடைக்கவில்லை.

19 இ.போ.ச நிட்டம்புவ பழைய பஸ் நிறுத்துமிட நிலம் மிகவும் வர்த்தக பெறுமதியுடையாதலால் அந்நிலத்தை வர்த்தக நடவடிக்கைகட்குப் பயன்படுத்துவதற்கு இ.போ.ச பணிப்பாளர் சபை தீர்மானித்து இக்காணி தொடர்பில் பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கேற்ப கேள்விப்பத்திர சபைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு அதற்கான கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது.

20 பாணந்துறை பஸ் நிறுத்துமிடம் நிலம் தொடர்பாக பாணந்துறை நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு தற்போது இ.போ.ச நீதிப் பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

21 இ.போ.ச அட்டன் சாலைக் காணியில் அனுமதியற்ற கட்டடம் தொடர்பான முறைப்பாட்டிற்கேற்ப சாலைக் காணி அளவீடு செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டு காணி மீட்பு ஆணைக்குழுவுடன் பிணக்குத் தொடர்பாக கலந்துரையாடி இ.போ.ச உரித்து உறுதிப்படுத்தப் பட்டதாயினும் இதுவரையில் ஒரு தீர்மானமும் மேற் கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் ஞாபகமூட்டும் மடல்களும் அனுப்பப்பட்டுள்ளன.

22 இது தொடர்பில் தகவல் இல.4 ல் காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பிரிவு

01. நாடு பூராவுமுள்ள இ.போ.ச வின் தலைமை அலுவலகம் சாலைகள் பிராந்திய வேலைக்களங்கட்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்தல்

02. இ.போ.ச தொடர்பாக பயணிகள் முறையீடுகள் ஊடக அறிக்கைகள் மற்றும் வேறு மோசடிகள் தொடர்பில் புலனாய்வு

03. இ.போ.ச நிறுவகத்துள் உள்ள தீயணைப்பு/முறையைப் கண்காணித்தல் பேணுதல்

04. இபோ.ச ஊழியர் யாவருக்கும் ஆளடையாள அட்டை வழங்கல்

05. இ.போ.ச நிறுவகத்துள் திடீர்ப் பரிசோதனைகள் நடாத்தலும் ஒழுக்காற்றைப் பேணலும்

06. திடீர் செயலிழப்பின் போது இ.போ.ச சொத்துக்களையும் ஊழியர்களின் உயிர்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளலும்

07. இதர நிறுவகங்களுடன் இணைப்பை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளலும்

08. மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையம் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் அதன் மூலம் வருவாயைப் பெறலும்

09. போக்குவரத்து அமைச்சு போக்குவரத்து இராஜாங்க அமைச்சு அலுவலகங்கட்குத் தேவையான பாதுகாப்பு வழங்கல்

10. இ.போ.ச பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவு மேற்படி கடமைகளைப் புரிவதுடன் தேவைக் கேற்றவாறு இ.போ.ச கையளிக்கும் இதர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்

11. சட்ட முறைப்படியான கடமைகளைப் புரிதல்

பொறியியல் பகுதி

2019 ஆம் ஆண்டில் எஞ்சின்கள் கியர்ப் பெட்டிகள் பஸ் உடற்கோப்புகள் பழுதுபார்த்தல் தொடர்பான விவரங்கள்

	எஞ்சின்கள்	கியரபெட்டுகள்	பஸ் உடற்கோப்பு
பிராந்திய வேலைக்கள மட்டத்தில்	249	169	147
சாலையால்	438	1165	119
வெளி நிறுவகங்களால்	149	--	133
மொத்தம்	836	1334	399

உள்ளகக் கணக்காய்வுப் பகுதி

நிதிப் பிரிவு

01. கொள்வனவு செய்யப்பட்ட பஸ்களின் குத்தகை தவணைக் கட்டண கொடுப்பனவு

02. சகல களஞ்சியங்களிலும் ஆண்டு அளவை முறைப்படி மேற் கொள்ளல்

03. பிரதான காசேடு நாளாந்த காசேடு கொடுப்பனவு வவுச்சர் காசு கிடைக்கப் பெற்றவை மற்றும் வருவாய் ஒருங்கு சேர்த்தல் கணக்காய்வு

04. நிதி எரிபொருள் பாவனை (பஸ்கட்கு எரிபொருள் மேலதிகமாக அல்லது குறைவாக) அலுவலக வாகனங்கட்கு மற்றும் வேதனம் கணக்காய்வு ஊழியர்கட்கு கடன் அளித்தல் அறவிடல்

தொழிநுட்பப் பிரிவு

01. குத்தகை முறையின் கீழ் இந்திய கடன் உதவி முறையின் கீழ் பஸ்களைக் கொள்வனவு செய்தல்

02. பஸ்கட்குத் தேவையான புதிய முன் பதனிடப்பட்ட டயர், பற்றறிகள் கொள்வனவு, உரிய காலத்திற்கு முன்னர் பழுதுறும் டயர்கட்கு தள்ளுபடி பெறல்

03. உள்ளூர் கொள்வனவு பரிசோதனையும் மூலப் பொருள் கொள்வனவும்

04. எஞ்சின் கூறு பழுதுபார்த்தலும் கியர்ப் பெட்டி பழுது பார்த்தலும்

நிருவாகப் பிரிவு

01. மனிதவள தகவல் முறையைச் செயற்படுத்தல்

02. ஊழியர் ஆட்சேர்ப்பு பதவி உயர்த்தல் திட்டத்தை செயற்படுத்தல்

03. தொழினுட்ப பிணக்குகளைத் தீர்ப்பதற்கு சபை செயற் குழுவொன்றைத் தாபித்தல்

பயிற்சிப் பிரிவு

01. ஊழியர்களின் சகல பயிற்சி நடவடிக்கைகளையும் மேற் கொள்ளல்

செயலகப் பிரிவு

01. சகல சொத்துக்களினதும் முகாமைத்துவம்

02. காணியின் உரித்துடைமையை உறுதிப்படுத்தல் கணக்குகள் காட்டல்

நிதிப் பிரிவு

01. இ.போ.ச வின் சகல சட்ட நடவடிக்கைகளும்

சிவில் பிரிவு

01. இ.போ.ச வின் கட்டடம் பழுது பார்த்தல், புதிய நிருமாண நடவடிக்கைகளை மேற் கொள்ளல், மதிப்பிடுகள் தயாரித்தல், மூலப் பொருட்களைத் கொள்வனவு செய்தல்

அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு

01. பல்வேறு அறிக்கைகள் தயாரித்து சமரப்பித்தல்

பாதுகாப்பு பிரிவு

01. இ.போ.ச பாதுகாப்பு நடவடிக்கைகள்

ஏனையவை

01. 2018 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தை செயற்படுத்தல

02. பணிக்கொடைக் கணக்காய்வு

03. ஒழுக்காறு, விபத்தும் நட்டமும்

04. தலைவரினால் சமரப்பிக்கப்படும் விசேட கணக்காய்வு நடவடிக்கைகள்

05. கணக்காய்வு உரையாடல்களை நடாத்துதல்

06. கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களை நடாத்துதல்

07. சுற்றுலா வங்களாக்கள் சாலிகா மண்டபம் விளையாட்டரங்கு நடவடிக்கைகள்

08. அரச கணக்காய்வு விசாரணைக்கான மறு மொழிகளை மேற் பார்த்தல்

மனித வள முகாமைத்துவப் பகுதி

30000/- ரூபா படியில் முற்றும் ஒப்பந்த அடிப்படையில் 06 மாத காலத்திற்கு செய்யப்பட்ட சாரதி/நடாத்துநர் நியமனங்கள்

நியமனத் தன்மை	எண்ணிக்கை 2019
ஒப்பந்த சாரதிகள்	142
ஒப்பந்த நடாத்துநர்கள்	143
மொத்தம்	285

நிறைவேற்று நியமனங்கள் பற்றிய விவரம்

நியமனத் தன்மை	**எண்ணிக்கை 2019**
நிரந்தர நியமனங்கள்	-
தழுவல் நியமனங்கள்/ஒப்படை	15
பதவி உயர்வுகள்	-
தழுவல் நியமன நிரந்தரப்படுத்தல்கள்	-
இடமாற்றங்கள்	35
ஒப்பந்த நியமனங்கள்	-
புதிய ஆட்சேர்ப்புகள்	-
மொத்தம்	50

மீள வேலையளித்தல்

நியமனத்தின் தன்மை	***எண்ணிக்கை*** **2019**
மீள வேலை	05
மொத்தம்	05

செய்முறைப் பயிற்சியளித்தல்

நியமனத்தின் தன்மை	***எண்ணிக்கை*** **2019**
கணனிப் பிரிவு பயிற்சி	26
கணக்குப் பிரிவு பயிற்சி	03
தொழிநுட்ப பிரிவு பயிற்சி	17
மொத்தம்	46

நிறைவேற்றுத் தரம் அல்லாத இடமாற்றங்கள்

நியமனத்தின் தன்மை	***எண்ணிக்கை*** **2019**
இடமாற்றம்	262
மொத்தம்	262

ஒழுக்காற்றுப் பிரிவு

ஒழுக்காற்று கோவை விவரம்

நியமனத்தின் தன்மை	***எண்ணிக்கை*** **2019**
முடித்த ஒழுக்காற்றுக் கோவைகள்	2963
முடித்த மேன்முறையீட்டுக் கோவைகள்	266
மொத்தம்	3229

திடீர்ப் பரிசோதனைக் குழுப் பிரிவு

2019 ஆம் ஆண்டில் திடீர்ப் பரிசோதனைகளின் முன்னேற்ற அறிக்கை (தலைமை அலுவலகம்)

மாதம்	***குழுக்கள் எண்ணிக்கை***	***செவ்வை பார்த்தல் எண்ணிக்கை***	***செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை***	***பாரதூரமான குற்றங்கள் (IV)***	***சிறு குற்றங்கள் (V)***	***தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை***	***விதித்த தண்டப் பணம்***
ஜனவரி	04	40	-	49	09	38	12,392.00
பெப்ரவரி	04	42	644	34	05	38	13,202.00
மார்ச்	04	16	727	35	03	30	12,936.00
ஏப்ரல்	04	28	452	18	02	21	8,198.00
மே	04	32	465	37	03	24	9,964.00
யூன்	04	38	587	33	04	22	9,096.00
யூலை	04	45	680	35	03	25	9,980.00
ஆகஸ்ட்	04	40	604	30	01	27	10,114.00
செப்தம்பர்	04	36	549	27	05	24	8,824.00
ஒக்டோபர்	04	48	1,090	47	04	36	12,548.00
நவம்பர்	04	34	436	20	01	07	3,312.00
டிசெம்பர்	04	23	326	20	-	08	2,553.00
மொத்தம்		422	6,560	385	40	300	113,119.00

திடீர்ப் பரிசோதனைக் குழுப் பிரிவு

2019 ஆம் ஆண்டில் திடீர் பரிசோதனைகளின் முன்னேற்ற அறிக்கை (நாடு பூராவும்)

மாதம்	குழுக்கள் எண்ணிக்கை	செவ்வை பார்த்தல் எண்ணிக்கை	செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை	பாரதூரமான குற்றங்கள் (IV)	சிறு குற்றங்கள் (V)	தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை	விதித்த தண்டப் பணம்
ஜனவரி	30	444	8029	87	122	201	75304.00
பெப்ரவரி	41	428	7886	50	114	213	83990.00
மார்ச்	30	470	8535	68	136	230	95755.00
ஏப்ரல்	32	516	8801	41	121	149	65689.00
மே	29	485	8561	59	110	161	65744.00
யூன்	30	481	8468	58	156	186	76250.00
யூலை	30	345	9323	75	153	225	94511.00
ஆகஸ்ட்	31	509	8825	62	118	230	95681.00
செப்தம்பர்	30	466	8328	53	132	207	78934.00
ஒக்டோபர்	29	465	8421	75	94	199	77135.00
நவம்பர்	28	448	7451	35	76	124	47136.00
டிசெம்பர்	28	484	7785	56	82	128	58048.00
மொத்தம்	368	5,541	100,413	719	1,414	2,253	914,177.00

திட்டமிடல் அபிவிருத்திப் பிரிவு

திட்டமிடல் பிரிவின் செயற்திட்டம்				
உத்தேச நடவடிக்கைகள்	பௌதீக இலக்கு			
	காலாண்டு			
	1	2	3	4
2020 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி செயற் திட்டம் தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு மே மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு யூலை மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
2020-2023 ஆண்டுகட்கான கூட்டிணைந்த திட்டம் தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
சபை தொடர்பான சகல பொருத்தமான புள்ளிவிவர தகவல்களைச் சேர்த்து நாளது வரையாக்கல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது			

(சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள், மாகாண வேலைக் களங்கள் , சுற்றுலா வங்களாக்கள் உள்ளடங்கலாக) மாதாந்த இலாப நட்டக் கணக்கும் காசுப் பாய்ச்சல் கூற்றும் தயாரித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது
மாகாண வேலைக்களங்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள், சுற்றுலா வங்களாக்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது
கணக்காய்வு முகாமைத்துவ செயற்குழு அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது
போக்குவரத்து அமைச்சாலும் இதர அரச நிறுவகங்களாலும் வேண்டப்படும் விசேட அறிக்கை தயாரித்து சமர்ப்பித்தல்	ஆண்டு பூராவும் சேகரித்து சமர்ப்பிக்கப்பட்டது

கேள்விப்பத்திர சபை

தொடர் இல	**விடயம்**	**செயற் திட்டத்தின் பெயர்**	**2019 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய தொகை**	**நிதி முன்னேற்றம்** **ரூ.மில்**	**எய்திய இலக்கு**	**பௌதீக முன்னேற்றம்**
01.	சகல கொள்வனவுகளும் விற்பனைகளும் நடைபெறல்	செயலாற்றல் நடவடிக்கைக்கு தேவையான பொருட்கள் கொள்வனவு	508.68	318.00	53 சிறிய பஸ்கள் கொள்வனவு செய்தல்.	53 பஸ்கள் கொள்வனவிற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன
02.			3,419.60	2,203.20	44-54 ஆசனங்கள் கொண்ட 272 பஸ்கள் கொள்வனவு	272 பஸ்கள் கொள்வனவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன
03.			990.68	153.40	37 அதி உல்லாச பஸ்கள் கொள்வனவு செய்தல்	9 பஸ்கள் கொள்வனவிற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன
04.			500.00		09 மின்சார பஸ்கள் கொள்வனவு செய்தல்	திறைசேரி அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
05.			625.00		இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 100 சிறிய பஸ்கள் கொள்வனவு	53 பஸ்கள் பெறுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

06.			3,120.00		இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் 42 ஆசனங்கள் கொண்ட 400 பஸ்கள்கொள்வனவு	திறைசேரியால் நிதி ஒதுக்கப்படவில்லை
07.			16,694.02		143 914 025 லீற்றர் டீசல் கொள்வனவு	சந்தை விலைக்கேற்ப சாலை மட்டத்தில் தத் தமது தேவையைக் கொள்வனவு செய்யப்படுகிறது
08.			1,326.13	59.38	பஸ் பேணல் பழுதுபார்த்தலும் கூறுகள் உற்பத்திக்குத் தேவையான மாற்றுறுப்புகளும் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல்	அங்கீகரிக்கப்பட்ட கூறுவிலைகட்கேற்ப தலைமை அலுவலகம் மூலமும் சாலை மட்டத்திலும் மாற்றுறுப்புகள் கொள்வனவு செய்யப்படுகின்றன
09.			80.70	3.89	பஸ் பேணலுக்கும் பழுது பார்த்தலுக்கும் தேவையான வர்ணம் போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்தல்	சாலைத் தேவையின் பேரில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது
10.			1,184.90	847.11	பஸ் அணியைப் பேணுவதற்கு வேண்டிய 33672 புதிய டயர்களைக் கொள்வனவு செய்தல்	2019.12.31 ஆந் திகதி 24010 புதிய டயர்கள் கொள்வனவு செய்து சாலைகட்கு அளிக்கப்பட்டது
11.	சகல கொளவனவுகளும் விற்பனைகளும் நடைபெறல்		257.78	67.16	பஸ் அணியைப் பேணுவதற்கு வேண்டிய 10000 புதிய பற்றறிகளைக் கொள்வனவு செய்து விநியோகித்தல்	2019.12.31 ஆந் திகதி 2815 புதிய பற்றறிகள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை
12.			1400.00		பஸ் அணியைப் பேணுவதற்கு வேண்டிய எஞ்சின் கியர்ப் பெட்டிகள் போன்ற கூறுகளைக் கொள்வனவு செய்து வினியோகித்தல்.	திறைசேரியால் நிதி ஒதுக்கப்படவில்லை
13.			480.00		பஸ் அணியைப் பேணுவதற்கு 960 எஞ்சின்களைப் பழுதுபார்ப்பதற்கு	சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியங்கள் மூலம் பழுதுபார்த்தல் மேற் கொள்ளப்படுகிறது

					நடவடிக்கை எடுத்தல்	
14.	சகல கொளவனவுகளும் விற்பனைகளும் நடைபெறல்		192.00		பஸ் அணியைப் பேணுவதற்கு 960 கியர்ப் பெட்டிகளைப் பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்	சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியம் மூலம் பழுதுபார்த்தல் மேற் கொள்ளப்படுகிறது
15.			147.00		பஸ் அணியைப் பேணுவதற்காக 960 தொடக்க மோட்டார்கள் மாறுபடுத்திகள் எரிபொருள் பம்பிகள் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்	சாலைத் தேவைக்கேற்ப பிராந்தியங்கள் மூலம் பழுதுபார்த்தல் மேற் கொள்ளப்படுகிறது
16.			67.74		பஸ் அணியைப் பேணுவதற்கு அவசியமான வில்லுத் தகடுகளைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தல்	தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன
17.			1231.94		பஸ் அணியைப் பேணுவதற்குத் தேவையான டயர் மீள நிரப்பல் முன்பதனிடலுக்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்	தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன
18.			207.84		தேவைக்கேற்றவாறு சீட்டுக் சுருள்களும் சீட்டுப் புத்தகங்களும் கொள்வனவு செய்தல் தேவைக்கேற்றவாறு பருவகாலச் சீட்டுகளை அச்சிட்டு வினியோகித்தல்	தேவைக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட நிறுவகங்களிலிருந்து சாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன

19.			5.56		தேவைக்கேற்றவாறு பருவகாலச் சீட்டுகள் அச்சிட்டு வினியோகித்தல்	சாலைத் தேவைக்கேற்ப அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன
20			11.92	5.62	இ.போ.ச செயலாற்றல் நிருவாக நடவடிக்கைகட்குத் தேவையான அலுவலக உபகரணங்களும் எழுது கருவிவகைகளும் கொள்வனவு செய்து வினியோகித்தல்	தேவைக்கேற்றவாறு அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன
21.			18.97	75.90	500 சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்	2000 சீட்டு இயந்திரங்களை அளிப்பதற்கு நடவடிக்கை

						மேற்கொள்ளப்பட்டுள்ளது
22.			272.30	103.29	தேவைக்கேற்றவாறு 200 கணினிகள் 100 மடிக் கணினிகள் 50 அச்சிடும் இயந்திரங்கள் 200 யூபீஎஸ் இயந்திரங்கள் 100 விரலடையாளம் பதிக்கும் இயந்திரங்கள் கொள்வனவு செய்தல்	UPS 500, Computer 500, Laptop 30, Photocopy 68, Cash Counting 20, Fax Machine 32, Printer (Dotmatric) 100, AC 21 அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது
23.			110.50	0.63	இ.போ.ச கட்டடங்களிலும் வளாகங்களிலும் மின்சாரம் பேணலும் புதிய திட்டங்கட்கு வேண்டிய பொருட்களை கொள்வனவு செய்து வினியோகித்தலும்	தேவைக்கேற்றவாறு வளாகங்களுக்கும் புதிய திட்டங்கட்கும் 0.48 மில்லியன் ரூபா தலைமையலுவலகம் மூலம் செலவு செய்யப்பட்டு மின்சாரம் பேணப்படுகிறது
24.					இ.போ.ச கட்டடங்களையும் வளாகங்களையும் பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்	பிராந்திய மட்டத்தில் கூறு விலை கோரப்பட்டு பழுது பார்த்தல் மேற் கொள்ள நடவடிக்கை எடுத்தல்

பயிற்சி ஆராய்ச்சி அபிவிருத்தி பகுதி

2019 ஆம் ஆண்டில் பயிற்சி ஆராய்ச்சி அபிவிருத்திப் பகுதி நிறைவுசெய்த பயிற்சி வேலைக்கள விவரம்

தொடர் இல	***பயிற்சி வேலைக்களம்***	***பங்கேற்ற எண்ணிக்க***	***செலவு (ரூபா)***
01	வெளிக்கள பயிற்சி வேலைத் திட்டம் (வேலைத்திட்டம் 14)	1357	6,984,577.27
02	30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை விழிப்புணர்வு வேலைத் திட்டம்	306	83,290.00
	30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை விழிப்புணர்வு வேலைத் திட்டம்	236	69,170.00
	30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை விழிப்புணர்வு வேலைத் திட்டம்	144	37,600.00
	முகாமைத்துவ உற்பத்திவள வேலைக்களம்	70	132,032.00

03			
	முகாமைத்துவ உற்பத்திவள வேலைக்களம்	80	117,360.00
04	புதிய சம்பள அமைப்பின் கீழ் PL1/PL2/PL3 பயிற்சி	97	27,642.00
05	பணிக்கொடைக் கொடுப்பனவு தொடர்பான பயிற்சி வேளைக் களம்	118	12,732.00
06	கடிதம் கோப்பிடல் குறிப்பு பதிதல் கடமை மடல் வரைதல் பெயர் வழிக் கோப்பு பேணல் தொடர்பான பயிற்சி வேலைக்களம்	65	75,280.00
	கடிதம் கோப்பிடல் குறிப்பு பதிதல் கடமை மடல் வரைதல் பெயர் வழிக் கோப்பு பேணல் தொடர்பான பயிற்சி வேலைக்களம்	85	43,835.00
07	பட்டதாரிப்பயிற்சிக்கான அடிப்படை பயிற்சி வேலைத் திட்டம்	13	5,210.00
08	தொழிற் தகைமையற்ற பொறிவலர்க்கு ஜேர்மன் தொழினுட்ப நிறுவகம் மூலம் பயிற்சி	40	75,000.00
09	றேடியல் டயர் தொடர்பான பயிற்சி வேலைக்களம் (றுகுணு பிரதேசம்) நடாத்தியது டிமோ நிறுவக மூலம்	60	இல்லை
10	பீ எஸ் 4 தர எஞ்சின் கூறு தொடர்பான வேலைக்களம் (றுகுணு பிரதேசம்) இலங்கை அசோக் லேலண்ட் நிறுவக மூலம்	24	இல்லை
11	டயருக்கான தகவல் தொழினுட்ப முறைமையை நிறுவக மூலம் அறிமுகப் படுத்தி அதனை செயற்படுத்தல் தொடர்பான வேலைக்களம்	72	63,654.00
12	கணிணி முகாமைத்துவச் சான்றிதழ் பயிற்சி நெறி கட்டம் - 3	647	9,705,000.00 (செலுத்தவில்லை)

சட்டப் பகுதி

2019 ஆம் ஆண்டுக்குரிய பணிகள்

01) இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு (இ.போ.ச) சொந்தமான பிராந்திய அலுவலகங்களிற்கும் எல்லாச் சாலைகட்கும் எதிராக வெளியாரால் தொடுக்கப்படும், இ.போ.சபையினால் இதர தரத்தினருக்கெதிராகத் தொடுக்கப்படும் சகல வழக்குகளிற்கும் நாடு பூராவுமுள்ள சகல நீதிமன்றங்களிலுமுள்ள வழக்குகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

இதன் கீழ்

I. இ.போ.ச வழக்குகளில் இயன்றளவு சந்தர்ப்பங்களில் எல்லாம் சட்ட அலுவலர்கள் அந்தவந்த நீதிமன்றங்களில் தோற்றுதல் (விசேடமாக இ.போ.ச தலைவருக்கும் பணிப்பாளர் சபைக்கும் எதிராகத் தொடுக்கப்படும் வழக்குகளில் தோற்றல்).

II. வழக்குகள் தொடர்பான நீதிமன்ற ஆவணங்களைத் தயாரித்தல்.

III. சாலைகளிலும் பிரந்திய அலுவலகங்களிலுமுள்ள நீதிமன்ற அலுவலர்க்குத் தேவையான அறிவுறுத்துரைகளை வழங்கல்.

IV. சட்ட அலுவலர்களுடன் வெளிச் சட்டத்தரணிகளையும் சட்ட மா அதிபர் திணைக்களத்தைச் சேரந்த அரச சட்டத் தரணிகளையும் தொடர்புபடுத்தல்.

V. சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டத்தரணிகளுடன் தொடர்பு கொண்டு சட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றி வழக்கு அலுவல்களை மேற்கொள்ளல்.

02) இ.போ.சபைக்கு சொந்தமான பிராந்திய அலுவலகங்களிலும், சாலைகளிலும், தலைமையலுவலகத்திலும், ஏனைய பிரிவுகளிலும் நிலவும் சட்டப் பிணக்குகளிற்கும் நிருவாகப் பிணக்குகளிற்கும் தேவையான சட்ட மதியுரை அளித்தல்.

03) இ.போ.ச சபைக்கும் வெளியாருக்கும் இடையே செய்து கொள்ளப்படும் குத்தகை ஒப்பந்தங்கள், வினியோக ஒப்பந்தங்கள், பாதுகாப்பு ஒப்பந்தங்கள், பொது ஒப்பந்தங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்.

04) இ.போ.ச வசமுள்ள காணிகள் தொடர்பாக எழும் பிணக்குகளிற்கு செயலகப் பகுதிக்கு வேண்டிய மதியுரை அளித்தல், வெளி நிறுவகங்களுடன் நடைபெறும் கலந்துரையாடலகளில் பங்கேற்று அறிக்கை தயாரித்தல்.

05) தலைவரால் தொடர்புபடுத்தப்படும் பிணக்குகளிற்கு தேவையான சந்தரப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரித்தல்

இதற் கேற்ப சட்டப்பகுதியில் இ.போ.ச சட்ட ஆலோசகர், பிரதம சட்ட அலுவலர், உதவிச் சட்ட அலுவலர்கள் ஆகியேர் 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய கடமைகள் குறிப்படப்பட்டுள்ளன. இவ்வலுவலர்கள் நிறைவேற்றிய சகல பணிகள் தொடர்பாகவும் அறிக்கை தயாரிப்பது சிக்கல் வாய்ந்ததாகையால் 2019 ஆம் ஆண்டில் சட்டப் பகுதியின் சிறப்புப் பணிகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

01) 2019 ஆம் ஆண்டில் 67 நீதிவான் நீதிமன்ற அழைப்பாணைகள், 12 மாவட்ட நீதிமன்ற அழைப்பாணைகள், 68 தொழில் மன்ற விண்ணப்பங்கள், 18 நடுவர் மன்ற வழக்குகள், மீயுயர் நீதி மன்றத்திலும் மேன் முறையீட்டு நீதி மன்றத்திலும் 04 வழக்குகள் ஆக மொத்தம் ஏறத்தாழ 169 அழைப்பாணைகள் தொடர்பில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன் அவற்றின் எதிர்கால நடவடிக்கைளும் மேற கொள்ளப்படுகின்றன.

02) 2019 ஆம் ஆண்டில் சட்டப் பகுதியால் 49 ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டன.

03) அங்ஙனமே 2017 2018 ஆம் ஆண்டுகளில் சட்டமா அதிபர் திணைக்களம் இ.போ.ச வழக்குகள் தொடர்பில் தோற்றியமை மற்றும் வேறு நடவடிக்கைகட்காக 2019.10.09 ஆம் திகதி 108 வழக்குகட்கான பில் பட்டியலுக்கு ரூபா 8,035,105.00 இ.போ.ச சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு செலுத்தியது.

04) 2018.12.18 ஆந் திகதியிலிருந்து அளிக்கப்பட்ட ஏறத்தாழ 5000 பதவி உயர்வுகள் இரத்துச் செய்யப்பட வேண்டுமெனக் கோரி ஒரு தொழிற் சங்கத்தால் SCFR 239/19, வழக்கு மீயுயர் நீதி மன்றில் தொடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்வழக்கு தொடர்பாக 2019.07.17, 2019.09.24 ஆகிய திகதிகளில் நீதிமன்றத்தின் பணிப்புரைக்கமைய இ.போ.ச வில் இது வரையும் நிரந்தர ஊழியர்களை ஆட் சேர்த்தல் பதவி உயர்வு வழங்கல் ஆகியன இடை நிறுத்தப்பட்டுள்ளன. வெற்றிடங்கள் நிலவும் பதவிகட்கு சேவையின் தேவை அடிப்படையில் கடமைகளைக் குறித் தொதுக்கி தழுவல் முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

5 அங்ஙனமே முன்னிலை பகுதி ஊழியர்கட்கு உரிய அக் காலவெல்லையில் மேற் குறித்தவாறு வழங்கிய பதவி உயர்வுகளை இரத்துச் செய்யுமாறு கோரி SCFR 117/19 இலக்கம் கொண்ட வழக்கு தாக்கல் செயய்யப்பட்டதுடன் 2019.07.02 ஆம் திகதி மனுதாரர்களால் இவ் வழக்கு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

6 2018.10.29 முதல் 2018.12.14 வரையான காலவெல்லைக்குள் சில அலுவலர்கள் பதவிகளிலிருந்து அகற்றப்பட்டது தொடர்பில் SCFR 51/ 19 வழக்கு மீயுயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது

7 பதவி உயர்வு பெற்ற அலுவலர்கள் பெற்ற பதவி உயர்வு தொடர்பான நடவடிக்கைகட்கு அனுமதி கோரி மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் CA (Writ) 538/19 வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

8 இ.போ.ச விற்கு தீர்வை வரிச் சலுகையின் கீழ் மாற்றுறுப்புகள் இறக்குமதி செய்வது தொடர்பாக ஒப்பந்தம் செய்திருந்த வரையறுக்கப்பட்ட ஸ்டீல் இம்பெக்ஸ் அன்ட் இண்டஸ்றீஸ் கம்பனிக்கு இ.போ.ச வால் செலுத்தப் படவேண்டிய நிலுவை கோரி நடுவர் மன்றில் இரு தரப்பாரும் இணங்கி நிபந்தனையுடன் உடன்பட்டு 2019.05.09 ஆம் திகதி தீரப்பு வழங்கப்பட்டுள்ளது.

கவனத்தில் கொள்ள வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள்

1 நிறுவக தகவல்

1.1 அறிக்கையிடும் நிறுவகம்

இலங்கை போக்குவரத்துச் சபை 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்பட்டது. சபையின் பதிவு பெற்ற அலுவலகம் கொழும்பு-05, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. அதன் பிரதான வியாபார இடமும் அதே இடத்தில் உள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச) போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நிறுவகமாகும்.

1.2 பிரதான செயற்பாடுகள்

இவ்வாண்டில் சபையின் பிரதான செயற்பாடு சமுதாயத்திற்கு வீதிப் பயணிப் போக்குவரத்தினை ஏற்பாடு செய்வதாகும். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் குறிக்கோள் நியாயமான கட்டண முறையில் பாதுகாப்பான நம்பிக்கையுள்ள வசதியான வீதிப் பயணிப் போக்குவரத்தை அளிப்பதாகும்.

2. ஆயத்த அடிப்படைகள்

2.1 இணக்க அறிக்கை

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கட்கு (SLFRS/LKAS) அமைவாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுவரை உள்ளடங்கலாக அது வரையான காலங்கள் யாவற்றுக்கும் இ.போ.ச அதன் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கட் கேற்ப (இகநி) தயாரித்தது. 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கட்கேற்ப (SLFRS/LKAS) தயாரிக்கப்பட்டன.

நிதிக் கூற்றுகளில் நிதி நிலைக் கூற்று, முழுமையான வருவாய் கூற்று, உரிமையாண்மை மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவை அடங்கும்.

2.2 அளவிடும் அடிப்படைகள்

நிதிக் கூற்றுகள் வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.

2.3 ஒப்பியல் தகவல்

நடப்புக் காலத்தின் நிதிக் கூற்றுக்களின் புரிந்து கொள்ளும் ஆற்றலை உயர்த்துவதற்காகவும், காலங்கட்கிடையே ஒப்பியல் தன்மையை மேம்படுத்து வதற்காகவும், நிதிக் கூற்றுக்களில் முந்திய காலத்திற்கு அறிக்கையிட்ட சகல தொகைகட்கும் தரமான விவரமான, விளக்கமான தகவல் உட்பட ஒப்பியல் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வேறுவிதமாக காட்டப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி இந் நிதிக் கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்ட சகல காலங்கட்கும் ஒரே சீராக இக் கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே விளக்கப்பட்டவாறு பிரயோகிக்கப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுகளில் உள்ள சமர்ப்பணம் அல்லது வகைப் படுத்தல்கள் திருத்தப்பட்ட விடத்து, சிறந்த சமர்ப்பித்தலுக்காக ஒப்பியல் தொகைகள் நடப்பு ஆண்டுடன் இணங்கக் கூடியவாறு மீள வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 மதிப்பீடுகள், தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS) இணங்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முகாமை கணக்கீட்டுக் கொள்கைப் பிரயோகத்தைப் பாதிக்கும் ஊகங்களையும், மதிப்பீடுகளையும், தீர்ப்புகளையும் செய்ய வேண்டியதுடன், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள், வருவாய், செலவு ஆகியவற்றின் தொகையையும் அறிந்து கொள்ள வேண்டும்.

தீர்ப்புகளும், மதிப்பீடுகளும் வரலாற்று அனுபவத்தையும், சூழ் நிலைக் கேற்றவாறு நியாயமானதென நம்பக்கூடிய எதிர்பார்த்தல்கள் அடங்கிய இதர காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். எனவே உண்மையான அனுபவத்திலிருந்தும் முடிவுகளிலிருந்தும் இத் தீர்வுகளும் மதிப்பீடுகளும் வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படை ஊகங்களும் தொடர்ந்து இயங்கும் அடிப்படையிலேயே மீளவாயப்படுகின்றன. மீளவாய்தல் அக் காலத்தை மட்டுமே பாதிப்பதாயின் மதிப்பீடு மீளவாயப்படும் காலவெல்லையில் அல்லது தற்போதைய, எதிர்காலத்திற்கான இரண்டு காலவெல்லைகளையும் பாதிப்பதாயின், மீளவாயப்படும் காலவெல்லைகட்கான கணக்கீட்டு மதிப்பீடுகட்கான மீளவாய்வுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

2.5 சொத்துக்களும் அவற்றின் பெறுமதி அடிப்படைகளும்

சொத்துக்களும் அவற்றின் அடிப்படைகளும்

காசும், வங்கி மீதிகளும், அறிக்கையிடும் திகதியிலிருந்து ஓராண்டுக்குள் அல்லது சபையின் இயல்பான வியாபார தொழிற்பாட்டு வட்டத்துள் இதில் எது குறுகியதோ அதில் காசாகத் தேறுமென எதிர்பார்க்கப்படுபவையும் நிதி நிலைக் கூற்றில் நடப்புச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டனவுமாகும். நடப்புச் சொத்துக்கள் என்பது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஓராண்டுக்கு அப்பால் சபை வைத்திருக்க எதிர்பார்க்கும் சொத்துக்கள் தவிரந்த சொத்துக்களாகும்.

3. **கவனத்திற் கொள்ள வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள்**

இந் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட பிரதான கணக்கீட்டு கொள்கைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

3.1 **ஆதனம், பொறித் தொகுதி, உபகரணங்கள்**

